


டவர் பிக்காசோ அல்லது பிக்காசோ டவர் அல்லது டோர் பிக்காசோ என்று மூன்று விதமாக அழைக்கப்படும் அந்த 515 அடி உயரக் கட்டடம், ஸ்பெயினின் முக்கிய அடையாளச் சின்னங்களுள் ஒன்று.

அசப்பில் அமெரிக்காவில் இடிக்கப்பட்ட வர்த்தக மையக் கட்டடம் போலவே தோன்றும். சந்தேகமில்லை. வர்த்தக மையக் கட்டடங்களை வடிவமைத்த ஆர்கிடெக்ட் மினொரு யாமசாகி (Minoru Yamasaki) தான் இதனையும் வடிவமைத்துக் கட்டியவர். தரைக்கு மேலே 43 தளங்கள். தரைக்குக் கீழே ஐந்து தளங்கள். கொசுறாக இயந்திரங்கள் வைக்கப்படும் இரண்டு பெரிய ஹால்கள் அட்டாச்மெண்டாக உண்டு.

சுமார் ஒரு லட்சத்து இருபத்தொராயிரம் சதுர மீட்டர்கள் பரப்பளவு கொண்ட பிரமாண்டமான கட்டடம். பார்க்கிங் பகுதிகள் மட்டுமே 837.

1982-ம் ஆண்டு பூமி பூஜை போட்டு 1988-ம் ஆண்டு கட்டி முடித்தார்கள். ஸ்பெயினின் மிக உயரமான கட்டடம். பிராந்தியத்தைக் கடக்கும்போது, விமானங்கள் கொஞ்சம் எகிறிக் குதித்துத்தான் போகவேண்டும். மொட்டை மாடியில் வற்றல் காயவைத்தால் கண்டிப்பாகக் காக்கா வராது.

ஏராளமான வர்த்தக நிறுவனங்கள், கட்டுமான நிறுவனங்கள், புகழ்பெற்ற ஸ்பானிஷ் ப்ளஸ் சானல் டி.வி. அலுவலகம் என்று தளத்துக்குத் தளம் வளம் கொழிக்கும் கட்டடம் அது.

ஒரு பிரமாண்டமான கட்டடத்தைத் தகர்க்கலாம் என்கிற யோசனை, முதன்முதலில் இ.டி.ஏ.வுக்குத்தான் தோன்றியிருக்கிறது. தோற்றுவிட்டார்கள். அல் காயிதா முந்திவிட்டது என்றாலும், முதல் யோசனை அவர்களுடையதுதான். சந்தேகமில்லை.

ஆனால், அல் காயிதாவைப் போல் திட்டமிட்டு அத்தனை பெரிய கட்டடத்துக்கு எத்தனை கிலோ வெடிபொருள் தேவையாக இருக்கும், என்ன மாதிரி ஆயுதம் சரிப்படும் என்றெல்லாம் இ.டி.ஏ. யோசிக்கவில்லை. பத்துப் பேரைக் கொல்ல இத்தனை கிலோ வெடிமருந்து வேண்டியிருக்கிறதா, அத்தனை பெரிய கட்டடத்துக்குப் போடு ஒரு ரெண்டாயிரம் கிலோ என்று குத்து மதிப்பாகத்தான் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இரண்டு வேன்களில் சரக்கை ஏற்றி, பிக்காசோ டவரின் அடிப்பாகத்தில் கொண்டுபோய் நிறுத்திவிட வேண்டியது. பிறகு பீடி பற்றவைத்து வீசிவிட்டு வந்தால், கட்டடம் உதிர்ந்துவிடும் என்பது கணக்கு.

பெரிய பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் கிடையாது. தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் போய்வருகிற பிராந்தியம். உள்ளே போய் வண்டியை பார்க் பண்ணுவது பெரிய காரியம் இல்லை. டோக்கன் வாங்கிக்கொண்டு நிறுத்திவிட்டு வந்துவிட்டால் போதும். மிச்சத்தை உள்ளே இருக்கிற சரக்கு பார்த்துக்கொள்ளும். அடித்தளத்தில் வெடிக்கவிருப்பதால் கண்டிப்பாக பெரிய பாதிப்பு இருந்தே தீரும் என்று நினைத்தார்கள்.

ஆனால், அத்தனை பெரிய காரியத்துக்கு சும்மாவாவது நாலு பேரை வேனில் ஏற்றித் தனியே அனுப்புவது

தகாது என்று நினைக்காமல் விட்டார்கள் பாருங்கள்! அங்குதான் தோல்வி எட்டிப் பார்த்தது. பாதுகாப்பு ஏற்பாடுகளில்லாமல் ஹைவேயில் போன வண்டியை நிறுத்தி மடக்கிப் பிடித்துவிட்டார்கள். ஒருநாள். மறுநாளும்.

1700 கிலோ வெடிபொருள் நஷ்டம். சில உயிர்களும். அதன்பிறகு, அந்தக் கட்டடத்துக்குப் பிரமாதமான பாதுகாப்புகளெல்லாம் செய்துவிட்டார்கள். திடீரென்று சர்வதேசப் புகழ் வேறு வந்துவிட்டது.

ஆனால் ஒரு விஷயம். வர்த்தக மையக் கட்டடத்தைத் தகர்க்க, அல் காயிதா இரண்டு முறை முயற்சி செய்த மாதிரி இ.டி.ஏ. இன்னொரு அட்டெம்ப்ட் செய்யவில்லை. ஒரு முயற்சி. ஒரு தோல்வி. அதோடு சரி. துடைத்துப் போட்டுவிட்டு பாஸ்க் பல்கலைக் கழகத்தின் இதழியல் பிரிவு அரங்கம் ஒன்றில் அவசர அவசரமாக குண்டு ஒன்று வைத்துவிட்டு, அடுத்த கடமைகள் ஆயிரம் உண்டிங்கு மகனே என்று போயேவிட்டார்கள். அந்த குண்டு வெடித்ததா என்று கூடப் பார்க்கவில்லை. (வெடிக்கவில்லை. கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்துவிட்டார்கள்.)

இம்மாதிரி அடுத்தடுத்த தோல்விகளால் கொஞ்சம் கூட சோர்ந்து போகவேயில்லையா என்றால், இல்லாமல் எப்படி இருக்கும்? ஆனால், காட்டிக் கொள்ளவில்லை என்பதுதான் விஷயம்.

மேற்படி, பல்கலைக்கழக குண்டுச் சம்பவத்தின் தோல்விக்குப் பிறகு, குத்து மதிப்பாக ஒரு வருஷம் இ.டி.ஏ. எந்த நாசகாரியத்திலும் ஈடுபடவில்லை. அவர்களது சரித்திரத்திலேயே இத்தனை பெரிய இண்டர்வெல் விடப்பட்டதாகத் தெரியவில்லை. 2001 மே மாத வாக்கில் பாஸ்க் முழுவதும் உள்ளாட்சித் தேர்தல்கள் சூடுபிடித்திருந்தன. அந்தச் சமயத்தில் ஏதாவது செய்யலாமே என்று நினைத்து சும்மா கிடந்த கார் ஒன்றில், கொஞ்சம் குண்டு ஏற்றி அனுப்பி வைத்தார்கள். அது வெடித்தும் பயனில்லாமல் போய்விட்டது. பத்திருபது பேருக்கு லேசாக அடிபட்டதுடன் சரி. பலி என்று ஏதுமில்லை.

தனது வேகம் தீர்ந்துவிட்டது என்பதை இ.டி.ஏ. புரிந்து கொள்ளத் தொடங்கியது அப்போதுதான். யோசித்துப் பார்த்தால் குறைந்தது மூன்று தலைமுறைகளாகத் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் இயக்கம் அது. மிகத் திறமையாகத் தன்னுடைய அங்கத்தினர்களின் பெயர்கள் எதுவும் வெளியே தெரியாமல் கட்டிக் காப்பாற்றி வந்துள்ள ஒரே இயக்கம். இ.டி.ஏ.வின் தலைவர் யார், தளபதிகள் யார் யார், மதியூக மந்திரி சபை இருக்கிறதா ஓர் இழவும் தெரியாது. எல்லா மூஞ்சிகளிலும் முகமூடி. ஒரே மாதிரி 'அபாயம், தொடாதே' என்று எழுதியிருக்கும் எலும்புக்கூடு போட்ட சிவப்புத் தகரம் மாதிரி கெட்டப்.

இன்றைக்கு வரையும்கூட இ.டி.ஏ. இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. வருடத்துக்கு நாலைந்து குண்டுகளாவது வெடிக்காமல் இல்லை. ஆனால், பழைய வீரியம் போய்விட்டது. பல குண்டுகள் சொதப்பிவிடுகின்றன. அதிரடியாகப் பல இ.டி.ஏ. உறுப்பினர்கள் சிவில் கார்டு போலீஸாரிடம் சிக்கிக் கொண்டு விடுகிறார்கள்.

என்ன ஆயிற்று?

தெரியவில்லை. யோசித்து யோசித்துப் பார்த்தார்கள். ஏதோ குறைகிறது. என்ன அது? அதன் பெயர் மக்கள் ஆதரவு. சற்று நேர்மையாக யோசித்தால், இ.டி.ஏ.வுக்கு இது புரியாமல் இருக்க நியாயமில்லை. ஆனால் தயக்கம் தடுக்கிறது. 2004-ம் ஆண்டு அல் காயிதா ஸ்பெயினில் நிகழ்த்திய தொடர் ரயில் குண்டுத் தாக்குதல் சம்பவம் வரை இ.டி.ஏ. இந்த சுய இரக்கத்திலும் சோர்விலும்தான் மூழ்கிக் கிடந்தது. அந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் கொஞ்சம் உயிர்பெற்று எழுந்தார்கள் என்று சொல்லவேண்டும்.

மார்ச் 11, 2004. செப்டெம்பர் 11, 2001க்குப் பிறகு நினைவில் இருக்கவேண்டிய இன்னொரு தேதி. அன்றைக்குத்தான் அது நிகழ்ந்தது.

மாட்ரிட் நகரை மயான பூமியாக்க முடிவு செய்து, அந்தத் தாக்குதலைத் தீர்மானித்தது அல் காயிதா. பதின்மூன்று குண்டுகள். நான்கு ரயில்கள். அனைத்தும் ஒரே பாதையில், ஒரே திசையில் செல்லுகிற ரயில்கள். காலை நேர அவசர சமயம். ஆபீஸ் போகிற அத்தனை பேரையும் ஆண்டவன் சன்னிதானத்துக்கு அழைத்துச் செல்கிற முயற்சி. ரயில்கள் அனைத்தும் காலை ஏழு மணி சுமாருக்குப் புறப்பட்டன. 7.37லிருந்து 7.40க்குள் பத்து குண்டுகள் வெடித்தன. இடம், அடோசா ரயில் நிலையம். மூன்று குண்டுகளும் 190 மனிதர்களும் இறந்தவர்கள் பட்டியலில்.

முதலில் யாருக்கும் அல் காயிதாவின் மீது சந்தேகம் வரவில்லை. ஸ்பெயினில் இப்படியொரு காரியம் என்றால், கண்டிப்பாக அது இ.டி.ஏ.வாகத்தான் இருக்கும் என்று தீர்மானமே பண்ணி விட்டார்கள். ஆனால், குண்டு வைப்பில் இருந்த ப்ரொஃபஷனலிஸம், துல்லியமாக அவை வெடித்த நேர்த்தி, ஏற்பட்ட பாதிப்பின் அளவு, யாருமே எதிர்பாராத தினத்தில் (அதுவும் அந்த 11-ம் தேதி!) நிகழ்ந்த விதம் (இ.டி.ஏ. கொத்தாகக் கொல்ல முடிவு செய்தால், முன்கூட்டி ஒரு பிட் நோட்டீஸ் போட்டுவிடும்.) எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்து ரொம்பத் தாமதமாகத்தான் அல் காயிதாவை மோப்பம் பிடித்தார்கள்.

தவிரவும் இ.டி.ஏ. ஒரு காரியத்தைச் செய்தால் அது ஜெயித்தாலும் தோற்றாலும் தான்தான் செய்தது என்று வெளிப்படுத்துவதில் தயக்கமே கொள்ளாது. அல் காயிதா அப்படியல்ல. ஒரு குண்டு வைக்கிற கணத்தில் ஒசாமா பின்லேடனை போஸ் கொடுக்கவைத்து போட்டோ எடுத்தாலும்கூட, 'அது நானில்லை. என்னைப் போல் இருக்கும் இன்னொரு உத்தமோத்தமன்' என்றுதான் பேட்டி கொடுப்பார்.

இதையெல்லாம் வைத்து அல் காயிதாதான் என்று முடிவுக்கு வந்தபோது, விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருந்த ஆசாமிகள் ஒவ்வொருவரைப் பற்றியும் துப்புத் துலங்க ஆரம்பித்தது. மொராக்கோவிலிருந்து ஒருவன். அல்ஜீரியாவிலிருந்து ஒருவன். சிரியாவிலிருந்து ஒருவன். எல்லோருக்கும் பொதுவில் இருந்த ஒற்றுமை, அனைவரும் முஸ்லிம்கள் என்பது. எனவே, இ.டி.ஏ. இல்லை என்பது நிரூபணமானது. இ.டி.ஏ.வில் முஸ்லிம்கள் கிடையாது.

ஆனால், கைதான 29 பேரில் யார் ஒருவரும் நேரடி அல் காயிதா வீரர் இல்லை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. ஃப்ராஞ்சைசீஸ் முறையில் காரியத்தைச் செய்து கொடுத்த செயல்வீரர்களாகவே அவர்கள் இருந்திருக்கலாம். அல்லது அந்த ஒரு காரியத்துக்காக வாடகைக்கு எடுத்திருப்பார்களாயிருக்கும். பக்காவாகப் பயிற்சியெல்லாம் கொடுத்துத்தான் அனுப்பியிருந்தார்கள் என்றாலும், அவர்கள் அல் காயிதாவின் உறுப்பினர் பட்டியலில் கையெழுத்திட்டுச் சம்பளம் பெறுகிறவர்கள் இல்லை.

அது கிடக்கட்டும். இ.டி.ஏ. இங்கே எங்கே வருகிறது?

வெடி மருந்து ஸ்பெஷலிஸ்டுகளான இ.டி.ஏ.வினர் தான் அல் காயிதா சார்பில் நிகழ்த்தப்பட்ட அந்தத் தாக்குதலுக்குத் தேவையான வெடிபொருள்களை சப்ளை செய்தது. ஒரு விஷயம். அல் காயிதாவுக்கும் இ.டி.ஏ.வுக்கும் சம்பந்தம் கிடையாது. ஒத்த கொள்கை என்று எதுவும் கிடையாது. ஒட்டுறவு? ம்ஹூம். நீ யாரோ இங்கு நான் யாரோ என்று பாடவேண்டியதுதான். பெட்டிக்கடையில் சார்மினார் வாங்கிக் கொளுத்திக் கொள்வது மாதிரி, இ.டி.ஏ.விடம் வெடிபொருள் வாங்கியிருக்கிறது அல் காயிதா. அவ்வளவுதான்.

தன் பேட்டையில் இன்னொரு தாதா வந்து கம்பு சுழற்ற இ.டி.ஏ. எப்படி, ஏன் சம்மதித்தது என்கிற கேள்வி இங்கு வரலாம். ஸ்பானிஷ் உளவுத்துறை மண்டையைக் குடைந்து யோசித்தும் இதற்கு ஒரு சரியான பதில் கிடைத்தபாடில்லை. அல் காயிதாவுக்கு சப்ளை செய்யும் அளவுக்கு தெம்பு இருக்கிறவர்கள், ஏன் தானே அப்படியொரு காரியத்தைச் செய்திருக்க முடியாது? திடீரென்று நல்லவர்களாகிவிட்டார்களா என்ன?

அப்படியெல்லாம் இல்லை. உண்மையில் இ.டி.ஏ.வுக்கு ஓர் ஆத்ம பரிசோதனை வேண்டியிருந்தது. அடுத்தடுத்த தோல்விகள். அது கொடுத்த சோர்வு. அயர்ச்சி. அடிக்கடி ஆட்களை இழக்கவேண்டியிருந்ததில் உண்டான பதற்றம். எங்கே தவறு என்று யோசித்தார்கள். காலத்துக்கு ஏற்பத் தன்னுடைய அணுகுமுறையை மாற்றிக்கொள்ளத் தெரியவில்லையோ என்று கவலைப்பட்டார்கள்.

கண்ணுக்கு முன்னால் அல் காயிதா ஒரு காரியத்தைச் செய்து காட்டுகிறேன் பார் என்கிறது. பார்த்தால்தான் என்ன?

அந்த மாட்ரிட் ரயில் குண்டுச் சம்பவத்தைப் பொறுத்தவரை, இ.டி.ஏ. வி.ஐ.பி பாஸ் வாங்கிக்கொண்டு, காலரியில் அமர்ந்து பார்க்கும் மனோபாவத்தில் மட்டுமே இருந்தது. கடைசிவரை இந்த நிலையிலிருந்து மாறவில்லை. யார் யார் வருகிறார்கள், எத்தனை பேர் வருகிறார்கள், எப்படித் தம்மை ஆயத்தம் செய்துகொள்கிறார்கள், எப்படி குண்டு வைக்கிறார்கள், என்னென்ன முன்னேற்பாடுகள், குண்டுக்குப் பின் என்ன நடக்கிறது, எப்படித் தப்பிக்கிறார்கள் அல்லது சிக்குகிறார்கள், அரசு எப்படி ரியாக்ட் செய்கிறது, புலனாய்வு எப்படி வேகம் கொள்கிறது? அனைத்தையும் வெறும் பார்வையாளராக இருந்து கவனித்தது

இ.டி.ஏ.

ஒரு சில ஸ்பானிஷ் பத்திரிகைகள் மட்டும் இ.டி.ஏ.தான், இ.டி.ஏ.தான் என்று ரொம்பகாலம் வரை அலறிக்கொண்டே இருந்தன. சில எதிர்க்கட்சிகளும். வெடித்த பொருள் கோமா 2 என்பதால் (ஏற்கெனவே இது பற்றிப் பார்த்திருக்கிறோம்!), இ.டி.ஏ.தான் இக்காரியத்தைச் செய்தது என்பது அவர்களுடைய வாதம். ஆனால், கொஞ்சம் கொஞ்சமாக வெளிநாட்டுப் பிரகஸ்பதிகளின் பெயர்களும் உருவங்களும் வரத் தொடங்க, இந்த வாதம் மெல்ல மெல்லத் தேயத் தொடங்கியது.

இ.டி.ஏ.வைப் பொறுத்தவரை அந்தச் சம்பவம் ஒரு ரெஃப்ரெஷ்மெண்ட். சிலிர்த்துக்கொண்டு இன்று புதிதாய்ப் பிறந்து ஏதாவது செய்யலாம் என்று, புத்தம் புதிதாக இயக்கத்துக்கு ஆள் சேர்க்க ஆரம்பித்தார்கள். வயதான இ.டி.ஏ. உறுப்பினர்களுக்கு வி.ஆர்.எஸ். கொடுத்து அனுப்பினார்கள். இயக்கத்தை நவீனப்படுத்துவது என்று முடிவு செய்துகொண்டார்கள். ஸ்பெயினில் ஒரு மாபெரும் புரட்சி பண்ணாமல் ஓய்வதில்லை என்பது வீர சபதம்.